1979 மார்ச் 27]

அந்த 48 பணியாளர்களில் 15 பேர் தொழில் தகராறுகள் சட்டத்தின் 2 (ஏ) பிரிவின் கீழ் கோயம்புத்தூர் தொழிலாளர் நல அதிகாரியின் முன்னர் தொழில் தகராறுகளை எழுப்பியிருந்தனர். அவை இன்னும் தீர்க்கப்படாமல் உள்ளன. இதுபற்றிய சமாதான பேச்சு வார்த்தை தோல்வியடைந்தது என அரசுத் தொழில் மற்றும் வேலை வாய்ப்பு துறைக்கு சேரன் போக்குவரத்துக் கழகத்திடமிருந்து அறிக்கை வந்துள்ளது. இந்த அரசும், மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க இந்த தொழிலாளர்களுடைய கோரிக்கைகள் இப்பொழுது பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அரூர் மருத்துவமனைக் கட்டிடம்.

*வினா எண். 536— திரு எச். ஜி. ஆறுமுகம், திரு. எம் அண்ணாமலை: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம் அரூரில் மருத்துவமனைக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் இந்த ஆண்டில் கட்டிடம் கட்டுவதற்கான வழி வகைகள் செய்யப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: இல்லை.

[முற்பகல் 9-20]

திரு. எச். ஜி. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அரூரில் 1976ஆம் ஆண்டில் வனத் துறையிடமிருந்து 10 ஏக்கர் நிலத்தை புதிய மருத்துவமனை கட்டுவதற்காக வாங்கப்பட்டது. அதுவும் அல்லாமல் அரூரில் 40, 47 வருடங்களாக அங்கே இருக்கிற மருத்துவ மனையை விரிவுபடுத்த முடியாமல் அதே நிலையில் உள்ளது. இப்போது 10 ஏக்கரில் 5 ஏக்கர் வீட்டு வசதி வாரியம் வாங்கிக் கொண்டுவிட்டது. இந்தப் புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியிலாவது இந்த வருடமாவது அரூரில் புதிய மருத்துவ மனையை கட்டுவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, அரூர் மருத்துவ மனையில் தற்போது 11 படுக்கைகள் உள்ளன. அரூரில் இருந்து 25 கிலோ மீட்டர் தொலைவில் உத்தங்கரை பகுதியில் 10 படுக்கை கொண்ட அரசு மருத்துவமனை இயங்கிக் கொண்டு வருகிறது. அந்த மருத்துவ மனையில் 1974, 1975, 1976 வருடங்களில் வெளி நோயாளிகள் எண்ணிக்கை முறையை 190,215,277 ஆக இருந்திருக்கிறார்கள்.

உள் நோயாளிகள் 22, 22, 25 ஆக இருந்திருக்கிறார்கள். அது மட்டுமல்ல, இந்த மருத்துவ மனையில் அறுவை சிகிச்சை செய்த வர்களின் எண்ணிக்கை 1974, 1975, 1976ஆம் ஆண்டில் முறையே 13, 236, 252 ஆகும். அந்த மருத்துவமனையை விரிவுபடுத்து வதற்காக, 1972ஆம் ஆண்டில் அரசு ஒரு ஆணை பிறப்பித்திருக் கிறது. 10 ஏக்கர் நிலத்தை 1975ஆம் ஆண்டில் வனத்துறை யிடமிருந்து மருத்துவத்துறை மேற்கொண்டது. 38 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையை கட்டுவதற்கு ரூ. 13.50 லட்சம் செலவாகும் என்று திட்டமிடப்பட்டது. தற்போது அரசி னுடைய நிதி நிலையில் அந்தத் திட்டம் மேற்கொள்ளப்படா விட்டாலும் அரூரில் உள்ள மருத்துவமனையில் அதிகப்படியான படுக்கைகள் உருவாக்குவதற்கு ஒரு திட்டம் அரசு பரிசீலனையில் விரைவில் செயல்படுத்தப்படும். மற்றொன்று, அந்த மருத்துவ மனையை விரிவாக்குவதற்கு ஒரு திட்டம் ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த திட்டத் தின்படி அரூரில் புதிய மருத்துவமனை வர வாய்ப்புகள் இருக் கின்றன என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். அண்ணாமலை: தலைவர் அவர்களே, அரூரில் புதிய மருத்துவமனை கட்டுவதற்கான சாத்தியக்கூறு தற்போது இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இன்றுள்ள மருத்துவ மனையில் அறுவை சிகிச்சை எண்ணிக்கை குறைவாக இருப்பதாக சொன்னார்கள். இந்த மருத்துவமனை 100 ஆண்டுக்கு முன் கட்டப்பட்டது. சாதாரண மருத்துவம் தான் உள்ளது. ஒரு அவசர பிரசவமோ அல்லது ஆபத்தான நிலையில் வந்தால் சேலம், தர்மபுரி போன்ற இடங்களுக்குப் போக வேண்டிய நிலை இருக்கிறது. இல்லை என்றால் செத்து விடுவோம் என்ற அச்ச உணர்வு அங்குள்ள மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்ப தோடு தற்போது உள்ள மருத்துவமனையும் இடநெரிச்சலும் சுகாதாரமற்ற நிலையில் தான் உள்ளது. இந் நிலையைப் போக்க உடனடியாக புதிய மருத்துவமனையை கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாக கேளுங்கள்.

திரு. எம். அண்ணாமலை: அத்தகைய ஒரு சூழ் நிலை கருதி இந்த வருடத்தில் மருத்துவ மனையை கட்டுவதற்கான மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: மாண்பு மிகு தலைவர் அவர்களே, தற்போது அரூரில் இருக்கும் மருத்துவ மனையில் அறுவை சிகிச்சை செய்வதில் எந்தவிதமான இடர் பாடுகளும் இல்லை. இருந்தாலும் அரூரில் இருக்கும் மருத்துவ மனையை விரிவுபடுத்த வேண்டும் என்பதற்காக அரசு தீவிரமாக

பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. கிராமங்களில் மக்களுக்கு நல்ல வசதி செய்து கொடுக்க வேண்டும் என்பதை இந்த அரசு தன் தலையாய கடமையாக ஏற்றுக்கொண்டிருக்கிறது. அதை ஆறாவது ஐந்தாவது திட்டத்தில் விரிவு ஆக்குகின்ற முறையில் அந்த மருத்துவ மனையின் படுக்கை எண்ணிக்கையை அதிகமாக்க வேண்டும் என்பதற்காக ஒரு திட்டம் இருக்கிறது. அதற்கான ஒரு செயற் குறிப்பு மருத்துவ இயக்குநரிடமிருந்து கேட்டிருக்கிறோம். அது வந்தவுடன் ஆவன செய்யப்படும்.

மருத்துவமனைகளில் வைத்தியப் பதிவுறுப் பிரிவுகள்.

* வினா எண். 537—திரு. எம். செல்வராஜ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

மருத்துவமனைகளில் நோயாளிகளைப் பற்றிய வைத்திய ரிக்கார்டு பிரிவு ஒன்று ஏற்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: இதற்கான *விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்படுகிறது.

திரு. துரை கோவிந்தராசன்; பேரவைத் தலைவர் அவர்களே இந்த மருத்துவமனைகளில் கிராமப்புறங்களிலிருந்து வருகிற நோயாளிகள் ஆங்காங்கு இருக்கிற டாக்டர்களை அணுகி சிகிச்சை பெற்றுக்கொள்வதற்கு வசதியாக—சுலபமாக காரியத்தைப் பெற்றுக்கொள்வதற்கு—ஜூனியர் அஸிஸ்டெண்ட்—இளநிலை உதவியாளர் நிலையில் ஒரு ரிஸப்ஷனிஸ்டை பெரிய மருத்துவமனைகளில் நியமித்து உதவி செய்கின்ற நிலையை உண்டு பண்ணுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை இந்த அரசு மனதிற் கொண்டுதான் மருத்துவமனைகளில் வருகின்ற நோயாளிகளுக்கு எந்தெந்தப் பகுதியில் எந்தெந்த சிகிச்சைக்கு போகவேண்டும் என்கின்ற விபரத்தை சொல்லுகின்ற அளவில் கைட் என்று சொல்லுகின்ற அளவில் பெரிய மருத்துவ மனைகளில் நியமிப்பது குறித்து செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

* 491ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.